# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது கலைமாணித் தேர்வு
## 2014 / 2015(August 2018)
# OCR 2263 – Good Governance and Team work

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. (அ) ஆளுகை (Governance), நல்லாளுகை (Good Governance), தீயாளுகை (Bad Governance) ஆகியவற்றிற்கான சொற்பொருள் விளக்கங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

(ஆ) நல்லாளுகைப் பண்புகளான பொறுப்புணர்வு (Responsibility), பொறுப்புக்கூறுதல் (Accountability) ஆகியவற்றை தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ) அணி அபிவிருத்தி படிநிலைகளை (Team Development Stages) குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் தனியாள், குழு ஆகிய இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

03. (அ) தீர்மானம் எடுத்தல் தொடர்பான குழுக்கலந்துரையாடல் ஒன்றில் உறுப்பினரிடையே வெளிப்படுகின்ற திறன்களைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) "மௌனி" (Mouse) ஒருவர் தம்மை இணக்கப்பாட்டாளராக ஆக்கிக் கொள்வதற்கு அவர் தம்மில் எவ்வகையான மாற்றங்களை உண்டுபண்ண வேண்டும் என்பதனை சுருக்கமாக குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

04. (அ) வினைத்திறன், விளைதிறன்களை சிறப்பாக வெளிப்படுத்தக்கூடிய குழுச்செயற்பாடு ஒன்றினைத் தெரிந்து அதனைச் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) சமத்துவம் (Equality), வெளிப்படைத்தன்மை (Transparency) ஆகிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நல்லாளுகை, தீயாளுகைச் செயற்பாடுகளை உதாரணங்களின் வழி விளக்குக. (10 புள்ளிகள்)

# பகுதி II

05. சிறந்த இணக்கப்பாட்டாளர் (Negotiator) என்ற வகையில் மகாத்மா காந்தியினுடைய செயற்பாடுகளை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

06. புனித அல்குர்ஆன் வெளிப்படுத்துகின்ற நல்லாளுகை தொடர்பிலான கருத்துக்களை எடுத்துக் காட்டுக.

(20 புள்ளிகள்)

07. அர்த்த சாஸ்திரம் வெளிப்படுத்துகின்ற நல்லாளுகை தொடர்பிலான சிந்தனைகளை விரி ஆராய்க.

(20 புள்ளிகள்)